**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**18 செப்டம்பர் 2015 / 04 துல்ஹஜ் 1436**

# <u>துல்ஹஜ் மாதத்தின் சிறப்புகள்</u>

الحَمْدُ لِلّهِ الَّذِي مَنَّ عَلَيْنَا أَيَّامًا مَعْلُومَاتٍ، وَأَلْهَمَنَا فِعْلَ
الخَيْرَاتِ وَ تَرْكَ المُنْكَرَاتِ، وَأَشْهَدُ أَن لا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لاَ
شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ مَنبعُ
القُرُبَاتِ وَسَيِّدُ المَخْلُوقَاتِ. اَللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا
مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَصَحْبِهِ أَجْمَعِيْنَ. أَمَّا بَعْدُ، فَيَا أَيُّهَا
الْمُسْلِمُوْنَ، أُوْصِيْكُمْ وَنَفْسِيْ بِتَقْوَى اللَّهِ عَزَّ وَجَلَّ، فَقَدْ فَازَ
الْمُتَّقُوْنَ.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

"ஈமான்" (இறை நம்பிக்கையும்) "தக்வா" (இறை பக்தியும்) அல்லாஹ்வின் புறத்திலிருந்து அருளப்படும் மாபெரும் அருட்கொடைகளாகும். அவற்றை அல்லாஹ் நமது உள்ளங்களில் வழங்குகிறான். இந்த அருட்கொடைகளைப் பாதுகாப்பதன் மூலமாகவும், அல்லாஹ்வின் மீதான நமது "தக்வா" வைப்

பலப்படுத்துவதன் மூலமாகவும், இந்த அருட்கொடைகள் வழங்கப்பட்ட தற்காக அல்லாஹ்வுக்கு நாம் நன்றி செலுத்திக் கொள்வோமாக!

ஜமாஅத்தார்களே!

நமது ஈமானைப் பாதுகாத்து, அதனைப் பலப்படுத்த வேண்டுமெனில், ”இபாதத்” (வணக்க வழிபாடுகளை) நிறைவேற்றுவதிலிருந்தும், அவற்றை ஆழமாக அறிந்து கொள்வதிலிருந்தும் நாம் விலகி இருக்க முடியாது. இவை மிகவும் முக்கிய அம்சங்களாகும். நாம் ஒரு முக்கியமான மாதத்தில் இருந்துக் கொண்டிருக்கின்றோம். இம்மாதத்தில் மில்லியன் கணக்கான ஹாஜிகள் ஆன்மீகப் பயணத்தை மேற்கொண்டு இறையில்லமாகிய கஃபத்துல்லாஹ்வை நோக்கிச் சென்றுள்ளார்கள். ஹஜ்ஜுக்குச் சென்றிருப்பவர்களுக்கு அவர்களின் பயணம் உளத்தூய்மையால் நிரம்பியதாக இருக்கும்; அல்லாஹ் அவர்களின் ஹஜ்ஜை ஏற்றுக் கொள்வானாக! அது ஒரு மறக்க முடியாத பயணம் ஆகும். பெரும்பாலான ஹாஜிகள் மீது, அவர்களது இப்பயணம் இவ்வளவு சிறப்பானத் தாக்கத்தை எவ்வாறு ஏற்படுத்த முடிகிறது? இதற்குக் காரணம், ஹஜ்ஜுடைய வணக்கத்தில் அதன் ஒவ்வொரு செயலையும் அதனை நிறைவேற்றுபவர் நன்கு அறிகிறார். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீது உச்சகட்டமாக நம்பிக்கை கொள்கிறார். அல்லாஹ்வின் விருப்பத்தையே மையமாக வைத்து செயல்படுகிறார். மேலும், புனித மக்கா, மதீனாவில் நிறைவேற்றப்படும் வணக்க வழிபாடுகளுக்கான அதிகமான நன்மைகளைப் பற்றி ஹாஜிகள் அறிந்துள்ளார்கள்.

துல்ஹஜ் மாதத்தின் முதல் பத்து தினங்களுக்கு அதிக சிறப்புகள் உள்ளன. ஹஜ்ஜுக்குச் செல்லாமல் இங்கு இருப்பவர்கள் அச்சிறப்புகளைக் கவனத்தில் கொண்டு, அவற்றின் மூலம் பயனடைய முயற்சிக்க வேண்டும். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா திருக்குர்ஆனின் ”அல்-ஃபஜ்ர்” எனும் அத்தியாயத்தின் 1-2 வரையிலான வசனங்களில் கூறுகின்றான்:

وَالْفَجْرِ ﴿١﴾ وَلَيَالٍ عَشْرٍ ﴿٢﴾

பொருள்: வைகறைப் பொழுதின் மீது சத்தியமாக! மேலும், பத்து இரவுகளின் மீதும் சத்தியமாக!

மேற்கண்ட வசனத்தில் கூறப்பட்டுள்ள பத்து இரவுகள் துல்ஹஜ் மாதத்தின் முதல் பத்து தினங்கள் தான் எனத் திருக்குர்ஆன் விரிவுரையாளர்கள் தெரிவித்துள்ளார்கள். இந்த பத்து தினங்களில் புரியப்படும் நற்காரியங்களின் சிறப்புகளைப் பற்றி நபி(ஸல்) அவர்களும் ஹதீதில் பின்வருமாறு வலியுறுத்திக் கூறியுள்ளார்கள்:

துல்ஹஜ் மாதத்தின் முதல் பத்து தினங்களில் புரியப்படும் நற்காரியங்களை அல்லாஹ் விரும்புவது போல் வேறு எந்த நாட்களில் புரியப்படும் நற்காரியங்களை விரும்புவதில்லை. எனவே, தஹ்லீல் (லாயிலாஹா இல்லல்லாஹு), தக்பீர் (அல்லாஹ் அக்பர்), தஹ்மீத் (அல்ஹம்துலில்லாஹ்) எனக் கூறுவதை அதிகரித்துக் கொள்ளுங்கள்! (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் அஹ்மது ரஹ்)

அல்ஹம்துலில்லாஹ் (எல்லாப் புகழும் எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கே உரித்தாகுக!) நாம் அனைவரும் துல்ஹஜ் மாதத்தின் முதல் பத்து தினங்களில் இருந்துக் கொண்டிருக்கின்றோம். நமது வாழ்க்கையும் மிகவும் சுருக்கமாக உள்ளது. எனவே, நன்மையைச் சம்பாதிப்பதற்காக அல்லாஹ் நமக்குக் கொடுத்துள்ள ஒவ்வொரு வாய்ப்பையும் நாம் பயன்படுத்திக் கொள்வது அவசியமாகும். நன்கொடைகள் வழங்குதல், தேவைப்பட்டோருக்கு உதவுதல் போன்ற அனைத்து நற்காரியங்களையும் நாம் அதிகரித்துக் கொள்ள வேண்டும். ஹஜ்ஜுப் பெருநாளன்று குர்பானி கொடுக்கும் சக்தி பெற்றவர்கள் அதனைச் செய்வதற்கு முயற்சிக்க வேண்டும். இது தவிர, இந்நாட்களில் இன்னும் பல நற்காரியங்களைச் செய்து, இந்த தினங்களைப் பிரகாசிக்கச் செய்யுமாறு ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களும் அறிஞர்களும் நமக்கு ஆர்வமூட்டியுள்ளார்கள்.

**முதன்முதலாக**, இந்நாட்களில் நோன்பு நோற்பதை அதிகரித்துக் கொள்ள வேண்டும். காரணம், இறைத்தூதர்(ஸல்) நவின்றுள்ளார்கள்:

எவரொருவர், அல்லாஹ்வுக்காக ஒரு நாள் நோன்பு நோற்கின்றாரோ அவரது முகத்தை அல்லாஹ், எழுபது வருட பயண தூரத்தின் அளவுக்கு நரகத்தை விட்டும் தூரமாக்கி விடுவான். (ஹதீது நூல்கள்: புகாரி, முஸ்லிம்)

அதிகமான நாட்கள் நம்மால் நோன்பு நோற்க முடியாவிட்டாலும், குறைந்த பட்சம் துல்ஹஜ் மாதத்தின் பிறை 9 "அரஃபா" தினத்திலாவது நோன்பு நோற்க முயற்சிக்க வேண்டும். காரணம், ரசூலுல்லாஹி(ஸல்) நவின்றுள்ளார்கள்:

அல்லாஹ்விடம் நன்மையை நாடி எவராவது "அர:ஃபா" தினத்தில் நோன்பு நோற்றால் அவரது முந்திய மற்றும் பிந்திய வருடங்களின் பாவங்கள் மன்னிக்கப்படும். (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் முஸ்லிம் ரஹ்)

ஜமாஅத்தார்களே!

சுப்ஹானல்லாஹ்! (அல்லாஹ் மிகவும் மேலானவன்; பரிசுத்தமானவன்). அர:ஃபா தினம் எனும் ஒரு நாளில் நோன்பு நோற்றால் அல்லாஹ் நமது இரண்டு வருடங்களின் பாவங்களை மன்னிக்கின்றான் என்றால் அந்த நாள் எந்தளவு சிறப்புக்குரியது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். எனவே, அந்த நாளின் சிறப்புகள் மற்றும் நன்மைகளின் மூலம் பயனடையுமாறு நம்மையும் நமது குடும்ப உறுப்பினர்களையும் நாம் ஆர்வப்படுத்த வேண்டும். நோன்பு திறக்கப்படும் நேரமானது நமது பிரார்த்தனைகள் ஏற்றுக் கொள்ளப்படும் நேரம் எனவும் நபி(ஸல்) அவர்கள் நமக்கு வாக்களித்துள்ளார்கள். எனவே, இந்நாட்களில் நோன்பு நோற்கும் போது, நாம் துஆ (பிரார்த்தனை) செய்வதை அதிகரித்துக் கொள்ள வேண்டும்.

அத்துடன், திக்ரு (அல்லாஹ்வைத் தியாணம்) செய்வதையும், அல்லாஹ்வை நினைவில் கொள்வதையும் அதிகரித்துக் கொள்ள வேண்டும். திருக்குர்ஆனை ரமதான் மாதத்தில் மிகவும் உருக்கமாக, ஆர்வத்துடன் ஓதியது போல் இந்நாட்களிலும் ஓத வேண்டும். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா திருக்குர்ஆனின் "அல்-ஹஜ்" எனும் அத்தியாயத்தின் 28-வது வசனத்தில் கூறுகின்றான்:

وَيَذْكُرُوا اسْمَ اللَّهِ فِي أَيَّامٍ مَعْلُومَاتٍ

பொருள்: ”.......அந்த குறிப்பிட்ட நாட்களில் அல்லாஹ்வின் பெயரை அவர்கள் கூறட்டும்..........”

மேற்கண்ட வசனத்தில் காணப்படும் ”குறிப்பிட்ட அந்த நாட்கள்” என்பவை துல்ஹஜ் மாதத்தின் முதல் பத்து தினங்களாகும் என இப்னு அப்பாஸ் (ரலி) விளக்கமளித்துள்ளார்கள். அந்த பத்து தினங்களில் அல்லாஹ்வை அதிகம் ”திக்ரு” (தியாணம்) செய்ய வேண்டுமென அறிஞர்கள் ஆர்வமூட்டியுள்ளார்கள். அவர்கள் இக்கருத்தை, இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கும் பின்வரும் ஹதீதை அடிப்படையாகக் கொண்டு கூறுகிறார்கள்:

”தஹ்லீல், தக்பீர், தஹ்மீத் சொல்வதை அந்த நாட்களில் அதிகரித்துக் கொள்ளுங்கள்” (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் அஹ்மது ரஹ்)

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள ஜமாஅத்தார்களே!

துல்ஹஜ் மாதத்தின் முதல் பத்து தினங்களைப் போன்ற வணக்கத்திற்கான விஷேசமான தினங்கள் நமது குறைகளைச் சரி செய்து கொள்வதற்கும், நமது பாவங்களை நினைத்து வருந்தி, அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு தேடுவதற்கும் மிகச் சிறந்த வாய்ப்புகளாக உள்ளன. எனவே, வணக்க வழிபாடுகளை நிறைவேற்றுவதற்காக அதிக நேரங்களைச் செலவிடுங்கள்!

அல்லாஹ்வின் மகிமையையும், அவன் நம்மீது பொழிந்துள்ள எண்ணற்ற அருட்கொடைகளையும் நினைத்துப் பார்ப்பதற்கும் அவற்றின் மூலம் நாம் எந்த அளவு பயனடைந்துள்ளோம் என சிந்தித்துப் பார்ப்பதற்கும் சில மணி நேரங்களை ஒதுக்குங்கள்! நாம் நிறைவேற்றும் வணக்க வழிபாடுகளை உண்மையாகப் புரிந்து கொள்ளவும் நேரத்தை ஒதுக்குங்கள்! அல்லாஹ்வின் பக்கம் திரும்புவதற்கும் அவனைச் சந்திப்பதற்கும் நாம் தயாராக உள்ளோமா? என நம்மை நாம் கேட்டுக் கொள்ள வேண்டும்.

ஜமாஅத்தார்களே! நாம் அனைவரும் அல்லாஹ்வின் சொர்க்கத்தை அடைவதற்கு ஆர்வமாக உள்ளோம். அதன் அருட்கொடைகளை அனுபவிக்க விரும்புகிறோம். எனினும், சொக்கவாசிகளாக ஆகும் தகுதி நமக்குள்ளதா? என நம்மை நாம் கேட்டுக் கொள்ள வேண்டும். நமது வணக்க வழிபாடுகளில் சுயமாகச் சிந்திப்பதற்கு நாம் சில மணி நேரங்களை ஒதுக்குவோமாக! அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா நமது நற்காரியங்களை ஏற்றுக் கொள்வானாக! நமது நற்காரியங்கள் நம்மையும் நமது குடும்பத்தார்களையும் அல்லாஹ்வின் நரகத்தை விட்டும் பாதுகாக்கட்டுமாக! மறுமையில் நாம் சொர்க்கவாசிகளாக ஆகுவதற்கு அவை உதவியாக இருக்கட்டுமாக! ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்றச் சென்றுள்ள அனைத்து ஹாஜிகளையும் அல்லாஹ் பாதுகாப்பானாக! அவர்களின் ஹஜ்ஜை "ஹஜ்ஜன் மஃரூர்" (ஏற்றுக் கொள்ளப்பட்ட ஹஜ்ஜாக) ஆக்குவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلَاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجَاةَ التَّائِبِيْنَ.